

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மேல் காரணை ஊராட்சியில் தேர்தல் பணிமனை அலுவலகத்தை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமா சங்கர், விஜயகுமார், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், மூர்த்தி, மணி, பாலமுருகன், சித்தார்த்தன், அழகுவேல், ரத்தினவேல், ராஜேந்திரன், நகரச் செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், மேல் காரணை கிளைச் செயலாளர் கருணாகரன், அன்பரசு, காரனை மத்திய ஒன்றியச் செயலாளர் ஆர்.பி.முருகன் மற்றும் மற்றும் கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி முகையூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் சுலோச்சனா ஏழுமலை இல்ல திருமண விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.இரவிச்சந்திரன், பிரேமா அல்போன்ஸ், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன், லூயிஸ், வேதாந்தம், முருகவேல், வீரப்பன், இராஜேந்திரன், பழனிவேல் ஐ.டி.ஐ. இராஜேந்திரன், ப்லோரா மேரி, முனியம்மாள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### விஷச்சாராயத்திற்கும், விக்கிரவாண்டி இடைத்தேர்தலுக்கும் தொடர்பு!

# அண்ணாமலையின் சதிச்செயல்தான் விஷச்சாராய மரணம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திருமயத்தில் பேட்டி!

புதுக்கோட்டை, ஜூன் 25 -

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சீரணி அரங்கத்தில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொது மக்களுக்கு சில நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



பொதுக்கூட்டம் முடிந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அதில் கூறியதாவது:-

அண்ணாமலை ஏதாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பார். அவரது பேச்சுக்கும் செய்கைக்கும் தொடர்பு இல்லை. விருப்ப ஓய்வில் சென்ற எஸ்.பி. கள்ளச்சாராய நிகழ்வு தெரிந்துதான் சென்றதாக கூறுகிறார். ஆனால் அந்த எஸ்.பி.யே இன்றைக்கு ஸ்டேட்மெண்ட் கொடுத்துள்ளார்.

அதெல்லாம் பொய் நான் அப்படிப் போகவில்லை எனது மருமகளுக்கு பிரசவம் பார்ப்பதற்காக விடுப்பு எடுத்து அமெரிக்காவுக்கு சென்றேன் என்று கூறியுள்ளார்.

இப்படி பொய் சொல்கிற மனிதனை வைத்துக் கொண்டு அவர் எந்த காலத்தில் உண்மையை பேசி உள்ளார். நான் கேட்கிறேன் ,இந்த சாவுக்கு காரணம் யார்?என்று ஆராய்ச்சிக்கு எல்லாம் நான் போக விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் டார்ஜிலிங்கில் ரயில் விபத்து ஏற்பட்டு அவ்வளவு பேர் செத்தார்கள். அப்போது மத்திய ரயில்வே அமைச்சர் ராஜினாமா செய்தாரா? நீட் தேர்வு கேள்வித்தாள்கள் எல்லாம் வெளியாகி உச்சநீதிமன்றம் காரி துப்புகிறதே, பல பேர் இறந்துள்ளார்களே அங்கே மத்திய அமைச்சர் ராஜினாமா செய்தாரா?

நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்த போது 137 பேர் சாராயம் குடித்து இறந்தார்களே, அப்போது அவர் ராஜினாமா செய்தாரா?

ஆக வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசக்கூடாது, கான்கிரீட்டாக சொல்ல வேண்டும்.

அது மட்டுமல்ல ராஜினாமா செய்ய வேண்டும் என்று சொன்னால் பாண்டிச்சேரியில் உள்ள முதலமைச்சர்தான் ராஜினாமா செய்ய வேண்டும். அங்கே இருந்து தான் சரக்கு வந்துள்ளது என்று காவல்துறை சொல்கிறது.

பிஜேபியில் உள்ள அவங்க தான் பண்ணி இருக்காங்க. அண்ணாமலையோட சதித்திட்டம் தான் இது என்று நான் சொல்கிறேன்.

அவர்கள் கட்சி ஆளுகிற மாநிலத்தில் இருந்து தான் இது வந்திருக்கிறது என்று சொன்னால் விக்கிரவாண்டி தேர்தலுக்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது.

இவர் அனுப்பி தேர்தலுக்கு முன்பாக இப்படி செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டாரோ என்ற சந்தேகம் என்னைப் போன்றோருக்கு இருக்கிறது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

### உயர்நீதிமன்றத்தின் அனுமதியோடு

# திருவட்டாறில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி தகவல்!

சென்னை, ஜூன் 25-

சட்டப்பேரவையில் உறுப்பினர் செ.ராஜேஷ்குமார் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்நீதிமன்றத்தின் அனுமதியோடு, திருவட்டாறில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.



இது குறித்து பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திருவட்டாறில் உரிமையியல் நீதிமன்றமோ, குற்றவியல் நீதிமன்றமோ எந்த நீதிமன்றங்களும் இல்லை. அப்படியிருக்கின்றபோது சார்பு நீதிமன்றம் என்கின்ற வினா எழுவதற்கான வாய்ப்பே அங்கே கிடையாது. ஆகவே, முதலில் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் வந்தாக வேண்டும். அதற்கு பிறகுதான். திருவட்டாறைப் பொறுத்தவரைக்கும், அங்கே சார்பு நீதிமன்றம் வர வேண்டுமென்று சொன்னால், பத்மநாபபுரத்திலிருக்கக்கூடிய அந்த நீதிமன்றத்திலே திருவட்டாறு பகுதியில் இருக்கக்கூடிய ஒரு 100 வழக்குகள்தான் தேக்க நிலையில் நிலுவையில் இருக்கின்றன. எனவே, சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு என்பது தற்போது நிச்சயமாக கிடையாது.

உறுப்பினர் ராஜேஷ்குமார் அவர்கள் அங்கே ஒரு குற்றவியல் நீதிமன்றமோ, உரிமையியல் நீதிமன்றமோ அல்லது MunsifcumJudicial Magistrate Court நீதிமன்றமோ வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் சொல்லியிருக்கின்றார். அது ஆரம்பக் கட்டம். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுச் சென்று, உயர்நீதிமன்றத்தினுடைய அனுமதியோடு அதனை கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் குடும்ப நல கோர்ட்டு அமைக்க வேண்டும் என்ற உறுப்பினருடைய கோரிக்கையை, உயர்நீதிமன்றம் எங்களுக்கு அந்த கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. அது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அதற்கு பிறகு உரிய நடவடிக்கைகள், முடிவுகள் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

### மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்கள் அறிவிப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மீனவர்கள் நன்றி - பாராட்டு!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூன் 25-

“மீனவர்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்களை பட்ஜெட் மானியக் கோரிக்கையில் அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மீன்வளத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் கழக மீனவர் அணி சார்பில் நன்றி தெரிவித்து கழக மீனவர் அணி செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, 2024 2025-ஆம் ஆண்டு மேற்கொள்ளவுள்ள திட்டங்களையும் அறிவித்துள்ளது. சட்டப்பேரவையில், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் 23 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்.

**மீன் இறங்கு தளம்!**

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு பாரதியார் நகர் கடற்கரை கிராமத்தில், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை சுகாதாரமான முறையில் ஏலம் விடு வதற்கும், மீன்பிடி வலைகளை சரி செய்வதற்கும், ரூ.5 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார். இதேபோல் தமிழ்நாடு முழுவதும் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, தூத்துக்குடி, நாகப்பட்டினம், விழுப்புரம் என தேவைப்படும் இடங்களில் எல்லாம் புதிய மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்களைத் தரமாகவும், சுகாதாரமான முறையிலும் வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்ல ஏதுவாக குளிர் காப்பிடப்பட்ட வாகனங்கள் வாங்குவதற்கு 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு, அதற்காக இன்னும் கூடுதலாக பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, ஆபத்து நேரங்களில் மீனவர்கள் அருகிலுள்ள மீன்பிடி படகுகளிலுள்ள மீனவர் களையோ, கரையில் உள்ளவர்களையோ தொடர்பு கொள்வதற்காக 2 கோடி ரூபாய் மதிப்பில் 200 ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு செயற்கைக் கோள் தொலைபேசிகள் வாங்கிட 40 விழுக்காடு மானியம் வழங்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், பெரியநாயகி தெரு மற்றும் பள்ளம்துறை மீன் இறங்கு தளங்களில் தூண்டில் வளைவு நீட்டிப்பு பணிகள் ரூ. 52 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் நீர்த்தேக்கங்கள், சிறிய நீர்ப்பாசன குளங்களில் மீன் பிடிப்பவர்களுக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக பரிசல் மற்றும் மீன்பிடி வலை போன்ற உபகரணங்களை வழங்கிட ஏதுவாக ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் மீன்பிடிப்பு திறன் அதிகரிப்பதுடன், வருவாயும் உயர வழிவகை செய்யப்படவுள்ளது.

அதேபோல் கிராமப்புறங்களில் மீன் உற்பத்தியினை அதிகரித்திட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்காக ரூ.75 லட்சம் செலவில் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் திட்டங்களை அறிவித்ததற்காக கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், மீன் வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணனுக்கும் கழக மீனவரணி சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.





விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் நேமூர், ஈச்சங்குப்பம், பிரம்மதேசம், எசாலம், எண்ணாயிரம், திருநந்திபுரம், பிடாரிப்பட்டு, செ.குண்ணத்தூர், கொளப்பாக்கம், செ.புதுர், நகர் ஆகிய ஊராட்சிகளில் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்துக்கு உதயசூரியன் சின்னத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் ஊரக தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கால்நடைத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வீதி வீதியாக வாக்குச் சேகரித்தனர் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், காதர்பாட்சா முத்துராலிங்கம், எஸ்ஆர்.ராஜா, திருமதி. வரலட்சுமி மதுசூதனன், ம.ஜெயசந்திரன், இரா.ஜனகராஜ், செஞ்சி சிவா, அ.தமிழ்மாறன், தயா. இளந்திரையன், வேம்பி ரவி , வி.ஜி.பிரபாகரன், ஜீவிதா ரவி, இரா.சக்கரை, வி.ஜி.பிரபாகன், பா.ஜீவா, பி.எம்.குமார், டி.என்.ஜெ.சம்பத், எசாலம் சிலம்பரசன், பிரேம், அருணாச்சலம், சித்திக் அலி, என்.என்.இளங்கோ, புருஷோத்தமன், நந்தா நெடுஞ்செழியன், பாபு, செ.தினகரன், கண்ணன் ஆனந்த், வினோத், தமிழ்ச்செல்வன், கோல்டு வெங்கடேசன், ப.அன்பரசு மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# அந்தியூர் தொகுதியில் - மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறந்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 25 –

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய அந்தியூர் தொகுதி கழக உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், “அந்தியூர் தொகுதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறந்திடுவீர்!” என வேண்டுகோள் விடுத்தார்.



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :

**ஏ.ஜி.வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியிலே 32 கிராமங்கள் இருக்கின்றன. அதில் பல்வேறு கிராமங்களுக்கு பேருந்து செல்லுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்தப் பகுதி மக்கள், அந்தியூரையே பார்க்காத அந்தப் பழங்குடியின மக்கள், ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோர் பெருமளவில் இருக்கின்றனர். ஆதலால், மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கவனத்தில்கொண்டு, சிரத்தனமாகக் கருதி, பர்கூர் மலைப் பகுதியைப் பொறுத்தவரையில் மூன்று பகுதிகளாகப் பிரிந்து பரந்த வெளியில் மக்கள் இருக்கின்றார்கள். அந்த மக்களை பர்கூரில் இருக்கின்றன main roadற்கு, சிற்றுந்துகளை இயக்கி பர்கூர் main roadற்கு கொண்டு வந்து விட்டுவிட்டாலே போதும். மற்ற நான்கு பேருந்துகள் பர்கூரிலிருந்து அந்தியூருக்கு வந்து சென்றுகொண்டிருக்கின்றன. அந்த மக்கள் மிவும் சவுகரியமாக வந்து சென்றுவிடுவார்கள். ஆதலால், அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து அந்த மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை காத்திட இரண்டு சிற்றுந்துகளை இயக்கித் தந்திட வேண்டுமென பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதியே இல்லாத மக்களுக்கு பேருந்து வசதியை தர வேண்டும் என்பதுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில்தான் தருமபுரி மாவட்டத்தில் வத்தல்மலை என்ற பகுதியில் நம்முடைய மாண்புமிகு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் சென்றபோது அந்தப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி இல்லை என்ற குறையைப் போக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே மனு அளித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அதை கனிவோடு பரிசீலித்து அந்தச் சாலையை விரிவாக்கம் செய்து பேருந்து விடுவதற்கு ஆணையிட்டார்கள். கடந்த ஆண்டு வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை அங்கே இயக்கி வைத்தார்கள். எனவே, பேருந்தை இயக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்கள் நமக்கு வழங்கியிருக்கின்ற அறிவுரை. அவருடைய அந்தியூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, அதிலே இருக்கின்ற அந்த மலைக் கிராமங்களில், பல்வேறு கிராமங்களுக்கு ஏற்கெனவே பேருந்து வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் ஒரு சில கிராமங்களுக்கு அந்த பேருந்து வசதிகள் இல்லை. அதிலே குறிப்பாக மலைப் பகுதியில் அமைந்துள்ள சுண்டபூர், சோழகனை போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சாலையானது குறுகிய கரடுமுரடான மண் சாலையாக உள்ளது. இன்னொன்று வனத் துறையிலே அந்த வனச் சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிலே அனுமதி பெற்றுத்தான் அமைக்கவேண்டிய சூழல். எனவே, அதில் இருக்கின்ற இடர்பாடுகளை நீக்கி அந்தப் புதிய சாலைகளை அமைக்கும்பட்சத்தில் அங்கே பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஏ.ஜி.வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி. அந்தியூர் தொகுதி மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து, அந்தியூர் தொகுதியிலே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை. அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி நகருக்குத்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அது அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் என்றாலும்கூட மலைப் பகுதியிலிருந்து 70 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் போன்ற தொலைத்தூரத்திற்கு வந்துதான் அந்த வாகனங்களை பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை அந்த மக்களுக்கு. அவர்கள் கஷ்டத்தில் இருந்து வருகிறார்கள். அதனால் அந்தியூரில், அந்தியூர் வட்டத்தில், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும், மலைப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அவசியம். அங்கே இருக்கின்ற வாகன செறிவினை கணக்கில் எடுத்துக்கொண்டு, அரசினுடைய நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.






விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி பேரூர்க் கழக நிர்வாகிகள் மற்றும் வார்டுக் கழகச் செயலாளர்கள் ஆகியோருடன் தேர்தல் பணி குறித்து கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் ஆலோசனை வழங்கினார். உடன் கடலூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.